சிசி **27/2022** அசா**.3** சுப்புலெட்சுமி க/பெ கணேசன் தேதி **05.06.2024**

(3 வது எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். 1, 2, 4, 5 எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 2, 4, 5 எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்)

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

அ.சா.1 காமாட்சியை கனகராஜிற்கு யார் மூலம் பெண் பார்த்தார்கள் என்றால் கனகராஜின் அப்பாவான 1 வது எதிரி முத்துகருப்பன், தாய்மாமாவான செல்வராஜ் ஆகியோர் பெண் பார்த்தார்கள். அ.சா.1 காமாட்சி புகார் அளித்தது தொடர்பாக போலிசார் எங்கு வைத்து எப்போது என்னை விசாரணை செய்தார்கள் என்றால் எங்கள் வீட்டிற்கு வந்து விசாரணை செய்தார்கள். முதல் விசாரணையில் சொன்ன விவரங்களைத்தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல அ.சா.1 காமாட்சியின் திருமணத்திற்கு பின்னர் 15 வது நாளில் 3 வது எதிரி சீதாலெட்சுமி அ.சா.1 காமாட்சியிடம் நகைகளை கொடு, எடைபோட்டு பார்க்கிறோம் என்று சொல்லி வாங்கவில்லை என்றால் சரியல்ல.

2. 3 வது எதிரி சீதாலெட்சுமி, 4 வது எதிரி கலைச்செல்வி, 5 வது எதிரி அழகுமதி ஆகியோர் அ.சா.1 காமாட்சியிடம் நாங்கள் கேட்ட நகைகளை உங்கள் வீட்டில் போடவில்லை என்றும், நீ என்ன 100 பவுன் நகையா போட்டு வந்தாய் என்று சொல்லி கொடுமை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 காமாட்சியின் கணவர் கனகராஜ் 2018 ஆம் ஆண்டு வெளிநாட்டிலிருந்து வந்தபின்னர் 2 வது எதிரி பிரபாகரன் டாடா ஏஸ் நான்கு சக்கர வாகனத்தை கேட்டு சண்டை எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. கனகராஜ் இறந்து 30 ஆம் நாள் காரியத்திற்கு பின்னர் நாங்கள் அ.சா.1 காமாட்சிக்கு கொடுத்த நகை மற்றும் பொருட்களை திரும்ப கேட்டபோது அவைகளை எதிரிகள் கொடுப்பதற்கு தயாராக இருந்தார்கள் என்றும், நாங்கள் கூடுதலாக நகையும் பணமும் கேட்டதால் அதனை எதிரிகள் தர மறுக்கவே எதிரிகள் மீது பொய்யான புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.